அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 40/94

எனது இல. 111/0266/2/68/எல்/எஸ்ஏ-94(2)
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பாராளுமன்ற
அலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1994, டிசம்பர் மாதம் 16 ஆந் திகதி.

செயலாளர்கள்,
**திணைக்களத் தலைவர்கள்** அனைவருக்கும்.

உலோகூர் சீமாட்டி கடனுதவு நிதியத்தின் தவணைக் கட்டணங்களை அறவிடுதல்.

---

சில அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து உலோகூர் சீமாட்டி கடனுதவு நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய மாதாந்த தவணைக் கட்டணங்கள் தொடர்ந்து செலுத்தப்படாமை பற்றி அத்தகைய நிதியத்தின் முகாமை நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதி அமைச்சின் செயலாளருடாக எனக்கு அறிவித்துள்ளார். இடமாற்றங்கள், ஓய்வு பெறல் சேவையிலிருந்து விலகுதல் மற்றும் பதவியைக் கைவிட்டுச் செல்லுதல் முதலிய காரணங்களால் உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்லும் சந்தர்ப்பங்களில் நிருவாக ஒழுங்கு விதிகளும் நிதி ஒழுங்கு விதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6, 4.2.4, 4.2.5, மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் மீதும், 1974.07.26 ஆந் தேதிய சீடி 41 இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் 1970.10.24 ஆந் தேதிய 11 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீதும் உங்களின் அவதானம் கோரப்படுகிறது. தாபனக் கோவையின் மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் ஓய்வூதியப் பணிப்பாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அவ்வாறு குறிப்பிடப்படுபவர் ஓய்வூதியப் பணிப்பாளர் அல்லது ஓய்வூதியங்களை செலுத்தும் அதிகாரி எனக் கருதி அதற்கமைய நடவடிக்கை எடுக்கவும்.

..௨

1. இந்த நிதியத்திலிருந்து கடன் பெற்றிருக்கும் ஓர் உத்தியோகத்தர் இட மாற்றம் செய்யப்படும்போது அத்தகைய கடன்கள் பற்றிய விபரங்களை இடமாறிச் செல்லுமிடத்தின் திணைக்களத் தலைவருக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன், உலோகசூர் சிமாட்டி கடனுதவு நிதியத்தின் நிருவாகிக்கும் அது பற்றி அறிவிக்க வேண்டும்.

11. நிதியில் கடன் பெற்றுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஓய்வு பெறுவது பற்றி அறிவிக்கும் போது திணைக்களத் தலைவரும் அது பற்றி நிதியின் நிருவாகிக்கும் அறிவிக்க வேண்டும், அத்துடன், ஓய்வூதியத்திலிருந்தோ பணிக்கொடையிலிருந்தோ ஓய்வூதியப் பணிப்பாளருக்கு/ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிக்கு அத்தகைய நிலுவையான தொகையை அறவிடக் கூடியதாக அத்தொகையை உத்தியோகத்தரின் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை தொடர்பான விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

111. அதே போல் நிதியத்திலிருந்து கடன் பெற்றுள்ள ஓர் உத்தியோகத்தர் பதவியை விட்டு விலகி பதவியை வெற்றிடமாக்கி அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அல்லது வேறேதேனும் விதத்தில் அரச சேவையைக் கைவிட்டுச் செல்லும் போது அது பற்றி அது தொடர்பான அனைத்து விபரங்களுடன் நிதியத்தின் நிருவாகிக்கு அறிவிக்க வேண்டும்.

அறவிடுதல்
------

1. எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு ஓய்வூதியமோ பணிக்கொடையோ சேமலாப நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டிய ஒரு தொகையோ வழங்கப்படாமலிருக்கும் சம்பளமோ செலுத்தப்பட முன்பாகவும், எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்குக் கிடைக்க வேண்டிய பிணைப் பணமோ வேறேதேனும் கொடுப்பனவோ அவருக்கு மீளளிப்புச் செய்யப்படுவன விதப்புரை செய்வதற்கு முன்பாகவும் அவ் உத்தியோகத்தரிடமிருந்து உலோகசூர் சிமாட்டி நிதியத்துக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை முழுமையாக அறவிடுவது தொடர்பாகச் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர்கள் இவ் அறிவுறுத்துரைகட்கு அமைய ஒழுகத் தவறுமிடத்து அத்தகைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படலாம்.

11. எவரேனும் ஒரு உத்தியோகத்தர் இத்தகைய அறிவுறுத்துரைகளைக் கடைப்பிடிக்க முடியாத காரணத்தால் நிதியத்திற்கு ஏதேனும் நிதி இழப்பு அல்லது ஏதேனும் ஒரு கடன் அறவிடப்பட முடியாதவிடத்து அந்தத் தொகை அவ் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படும் அத்துடன் இத்தகைய அறிவுறுத்துரைகளை கவனத்திற் கொள்ளாத அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் நேரிடும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பாராளுமன்ற அலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.